அமைச்சுச் செயலாளர்கள், மாகாணங்களுக்கான பிரதம செயலாளர்கள், மற்றும் திணைக்களத் தலைவர்கள்

2008 வரவு செலவுத் திட்டம்

தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபம் இல:136
தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

நிதி, திட்டமிடல் அமைச்சு

வருடாந்த வரவு செலவுத் திட்டம் - 2008
தயாரிப்பதற்கான பணிப்புக்களும் வழிகாட்டல்களும்.

2007.07.25

உள்ளடக்கம்

பகுதி 1

1. மேல் நோக்கு

1.1 2008 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட செய்முறைக்கான ஒரு மேலோட்டமான வரவுசெலவுத்திட்ட நாட்காட்டி

1.2 பேரினப் பொருளாதார நோக்கு

1.3 இறைக் கொள்கைகளும் வரவுசெலவுத் திட்ட முகாமைத்துவமும்

1.4 துறைசார் கொள்கைகளும் முன்னுரிமைகளும்

பகுதி 2

2. வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின் தயாரிப்பும் சமர்ப்பித்தலும்.

2.1 சுய மதிப்பீடு

2.2 2008 வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான வழிகாட்டிகள்

2.3 2008 வரவுசெலவுத்திட்ட சமர்ப்பிப்புக்கள்

2.4 விளக்கம் கோரல்

2.5 இணைப்புக்கள்

சட்டவரைபடம்

சட்டவரைபடம் 1 - 2008 வரவுசெலவுத்திட்ட செய்முறைக்கான மேலேட்டமான வரவுசெலவுத்திட்ட நாட்காட்டி

அட்டவணை

அட்டவணை 1- நடுத்தர கால பேரின அரசிறைச்சட்டகவரைபு 2006 - 2010 (மொ.உ.உ.விகித %)

வரைபடம்

வரைபடம் 1 – மீண்டெழுஞ் செலவினம் 2006

பெட்டிகள்

பெட்டி 1- செலவினக் கட்டுப்பாட்டு நடைமுறைகள்

இணைப்புக்கள்

இணைப்பு *1* -
2008 ஆம் ஆண்டுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆளணி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகள் பற்றிய தகவல்கள்

இணைப்பு *11*-
எரிபொருள், வாகனங்களை வாடகைக்குப் அமர்த்துதல்/பெறுதல் மற்றும் தொலைத் தொடர்புசேவைகள் பற்றிய சுற்றுநிருபங்களும் வழிகாட்டிகளும்

இணைப்பு III -
வாகனங்கள் தொடர்பான விபரங்கள்

இணைப்பு *IV* -
தொலைபேசிகள் மற்றும் தொலைநகல்கள் தொடர்பான விபரங்கள்

இணைப்பு *V* -
அமைச்சுக்களும் திணைக்களங்களுக்குமான மதிப்பீட்டு மாதிரி -2008

இணைப்பு *VI* -
நிறுவனங்களுக்கான (நியதிச் சட்ட சபைகள்) மதிப்பீடு சமர்ப்பித்தல் மாதிரி - 2008

இணைப்பு VII -
வரவுசெலவுத்திட்ட திணைக்கள அலுவலகர்களின் தொடர்பு விபரங்கள்

வரவுசெலவுத்திட்டம் 2008 தயாரிப்பதற்கான வழிகாட்டல்களும் நடுத்தரகாலசெலவின சட்டக வரைபு 2007 – 2010 மீளாக்கமும்

பகுதி 1

1. மேல் நோக்கு

வரவுசெலவுத்திட்ட அழைப்பு 2008, மஹிந்த சிந்தனைக்கு இயைந்ததான நடுத்தரகால செலவின சட்டக வரைபு (ந.கா.செ.ச.) 2006 – 2009 தயாரிப்பு, 27 ஜூலை 2006 இல் வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் இல: 131க்கு மேலதிகமாகவும் புதிய இலங்கைக்கான தொலைநோக்கு பத்தாண்டு அபிவிருத்திச் சட்டக வரைபு 2006 – 2010 மேலதிகமாகவும் செலவிடும் முகவராண்மைகளுக்கு அவர்களுடைய வருடாந்த வரவுசெலவுத்திட்ட உருவாக்கலில் உதவுமுகமாக விநியோகிக்கப்படுகிறது.

அடுத்து வரும் இரண்டு மாதங்களுக்கு (ஆகஸ்ட் - செப்ரெம்பர்) செலவிடும் முகவராண்மைகள் தமது நடுத்தர காலத் திட்டங்கள்(2006 – 2009) ஐ 2006 – 2007 காலப் பகுதி அனுபவங்களோடு சம்பந்தப்படுத்தி 2008 இல் அவர்களது நிறுவனங்களின் முன்னுரிமைகளை மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதைச் செய்வதற்கு செலவிடும் முகவராண்மைகள் மஹிந்த சிந்தனையில் அடையாளங்காணப்பட்ட முன்னுரிமைகளைக் கவனத்திலெடுக்க வேண்டும்.

1.1 வரவுசெலவுத்திட்டம் *2008* செய்முறைக்கான மேலோட்டமான வரவுசெலவுத்திட்ட நாட்காட்டி

வரவுசெலவுத்திட்ட செயல்முறை – 2008

செயற்பாடு	திகதி
அரசிறைக் கொள்கைக் குழுவினால் நடுத்தரக் கால பேரினப் பொருளாதார சட்டக வரைபு தயாரித்தலும், கௌரவ நிதி திட்டமிடல் அமைச்சரின் அங்கீகாரமும்	ஜூலை 2007 மத்தி
செலவிடும் முகவராண்மைகளுக்கு வரவுசெலவுத்திட்டம் மற்றும் ந.கா.செ.ச. தயாரிப்பதற்கான வரவுசெலவுத்திட்ட அழைப்பை, வழிகாட்டிகளுடனும், பணிப்புக்களுடனும் விநியோகித்தல்.	25 ஜூலை 2007
வரவுசெலவுத்திட்டம் மற்றும் ந.கா.செ.ச. மீளாய்வுக்கும் அங்கீகாரத்திற்கும் சுருக்கக் குறிப்பை அமைச்சரவைக்கு அனுப்புதல்	15 ஆகஸ்ட் 2007
அமைச்சுக்களினால் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திற்கு வரவுசெலவுத்திட்ட கோரிக்கைகள் சமர்பிக்கப்படல்	30 ஆகஸ்ட் 2007
வரவுசெலவுத்திட்டக் கோரிக்கைகளை செலவிடும் முகவராண்மைகளுடன்/அமைச்சுக்களுடனும் மீளாய்வு செய்தல்	25 ஆகஸ்ட் 2007 - 10 செப்ரெம்பர் 2007
செலவிடும் முகவராண்மைகளினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டக் கோரிக்கைகளை முடிவு செய்தல்	12 செப்ரெம்பர் 2007
ஒதுக்கீட்டுப் பிரேரணை 2008 இற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்தை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல்	19 செப்ரெம்பர் 2007
பாராளுமன்றத்திற்கு ஒதுக்கீட்டுப் பிரேரணையைச் சமர்ப்பித்தல் - முதலாவது வாசிப்பு	10 ஒக்டோபர் 2007
வரவுசெலவுத்திட்ட உரை - இரண்டாவது வாசிப்பு	7 நொவம்பர் 2007
இரண்டாவது மூன்றாவது வரவுசெலவுத்திட்ட விவாதம்	9 நொவ 2007 – 14 டிசெம்பர் 2007
செலவின அதிகாரமளிப்பு - கௌரவ நிதி திட்டமிடல் அமைச்சரினால் ஆணைப்பத்திரம் வழங்கப்படல்	20 டிசெம்பர் 2007
2008 ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றினை திறைசேரி விடுவித்தல்	27 டிசெம்பர் 2007

1.2 பேரினப் பொருளாதார நோக்கு

வரவுசெலவுத்திட்டம் 2008 தயாரிப்பில், அரசாங்க பேரினப் பொருளாதார மற்றும் அரசிறைச் சட்டகவரைவுக்குள் நெருங்கியவையாக நடுத்தரகால செலவினத்திட்டங்கள் மீள்பார்வை செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. பேரினப் பொருளாதார சட்டகவரைபு 7 சத வீத மேலதிகமான பொருளாதார வளர்ச்சியை நடுத்தர காலப் பகுதியில் நிலையான பொருளாதாரச் சூழலில் உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். பிரதான துறைகள் விரைவான வீத வளர்ச்சியைக் காட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2006 – 2016 காலப்பகுதியில் சராசரி வளர்ச்சி வீதம் விவசாயத்தில் 4.5 சதவீதம், தொழிற்துறையில் 8-9 சதவீதம் சேவைத்துறையில் 9-10 சதவீதம் என இலக்கிடப்பட்டுள்ளது.

அனைத்துத்துறைகளிலும் வருமானத் தோற்றுவாய்க்கு ஒரு பாரிய பங்களிப்பை செய்யும் வகையில் புதிய வளர்ச்சிப் பகுதிகள் அடையாளம் காணப்படுதல் வேண்டும். எதிர்வு கூறப்பட முடியாத எண்ணெய் விலைகள், சர்வதேச வர்த்தக நகர்வுகள், மற்றும் ஏனைய அபாயங்கள் காரணமாக பொருளாதார இலக்குகளும் எதிர்வுகூறல்களும் மிகவலுவிழந்த நிலையிலிருப்பதால் செலவு முகவராண்மைகள் வரவுசெலவுத்திட்ட முகாமைத்துவத்தில் நெகிழ்வுத்தன்மைகளை திறைசேரி சுவீகரிக்கும் போது ஒத்துழைக்க வேண்டப்படுகிறார்கள்.

அட்டவணை 1: நடுத்தரகால பேரின அரசிறை சட்டகவரைபு, 2006-2010 (மெ.உ.உ. வீதம் %)

காட்டி	உள்ளபடி		எதிர்வுகூறல்	மீளாய்வு	எதிர்வுகூறல்		
	2005	2006	2007	2007	2008	2009	2010
வருமானம்	16.1	17.1	18.5	18.7	19.0	19.2	19.3
வரி வருமானம்	14.2	15.3	16.7	16.9	17.2	17.5	17.6
வருமான வரி	2.2	2.9	3.2	3.5	3.6	3.7	3.8
பெ.சே.வரி	5.9	5.9	6.2	6.2	6.6	6.7	6.9
கலால் வரி	3.3	3.3	3.3	3.3	3.3	3.2	3.1
வர்த்தக வரி	1.9	1.9	2.2	2.4	2.3	2.4	2.4
ஏனையவை	1.0	1.3	1.8	1.5	1.5	1.5	1.5
வரியல்லாத வருமானம்	1.8	1.8	1.8	1.8	1.8	1.7	1.7
செலவினம்	24.7	25.4	27.7	26.6	25.6	24.8	24.3
மீண்டெழும் செலவினம்	18.7	19.6	18.4	19.3	18.1	17.3	16.8
சம்பளமும் படிகளும்	5.9	6.2	6.1	6.6	6.3	6.1	5.6
வட்டி	5.1	5.4	5.2	5.3	5.1	4.8	4.6
மானியங்களும் மாற்றல்களும்	5.4	5.1	3.9	4.2	3.8	3.6	3.5
ஏனைய மீண்டெழும்செலவினம்	2.4	2.8	3.2	3.2	2.9	2.9	3.0
வருமானம் (குறை| மிகை)	-2.7	-2.5	0.1	-0.5	0.8	1.9	2.5
பொது முதலீடு	6.3	6.3	9.4	7.4	7.6	7.7	7.7
உட்கட்டமைப்பு	2.7	2.8	5.3	4.3	4.8	4.6	4.5
மனிதவளம்	1.0	1.1	1.2	1.1	1.2	1.1	1.1
பிராந்திய அபிவிருத்தி	1.1	1.5	1.9	1.5	1.7	1.6	1.6
ஏனையவை	-0.2	-0.4	-0.1	-0.1	-0.1	-0.2	-0.2
முழுதான வரவு செலவுத்திட்ட குறை	-8.7	-8.4	-9.2	-7.9	-6.6	-5.6	-5.0
அரசாங்கக் கடன்	93.9	93.0	86.5	86.5	82.3	77.6	75.0

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

1.3 அரசிறைக் கொள்கையும் வரவுசெலவுத் திட்ட முகாமைத்துவமும்

2007 இல் அரச வருமானம் மொ.உ.உற்பத்தியில் 18.5 சதவீதமாக எதிர்வு கூறப்பட்டதோடு இது ஓரளவு நம்பகத்தன்மையானதுமாகும். எவ்வாறெனினும், மதிப்பிடப்பட்ட மீண்டெழும் செலவினம் மொ.உ. உ.இல் 18.4 சதவீதத்திலிருந்து ஏறத்தாழ 19 சதவீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதற்கு, சம்பள முரண்பாடுகளின் சரிப்படுத்துகை, ஓய்வூதியம் என்பவற்றில் எதிர்பார்க்கப்பட்டதற்கும் மேலான அதிகரிப்பு, புதிய ஆட்சேர்ப்புகள், விடுமுறைச் சலுகைப்படி, வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, வட்டிக்கான அதிக செலவு, மனிதாபிமான நிவாரணம் மற்றும் மீள்குடியேற்றச் செலவுகள், உர மானியம், எரி பொருள்களுக்கான தொடர்ந்த சர்வதேச உயர் விலை என்பன காரணமாகும். 25 சதவீதத்தினால் அரசாங்க வருமானம் அதிகரித்து 2007 இல் ஒரு மிகை வருமானம் எதிர்பார்க்கப்பட்டபோதிலும், அது அரசாங்க மீண்டெழும் செலவினங்களான சம்பளம், ஓய்வூதியம், வட்டிச் செலுத்துகை என்பவற்றின் உண்மையான தேவைகளைச் சந்திப்பதற்குப் போதுமானதாக இல்லாமல் உள்ளது.

நடவடிக்கைகளுக்கான செலவு, தொலைத் தொடர்பு, நீர், எரிபொருள், வாடகை போன்றன ஆகக்குறைந்த செலவு மட்டத்தில் முகாமைத்துவம் செய்யப்படுவதோடு, கடுமையான மேற்பார்வையின் கீழும் கொண்டு வரப்பட வேண்டும். ஒவ்வொரு செலவிடும் முகவராண்மையும் பொதுமக்களுக்கான அவர்களது சேவைகளுக்கும், முதலீட்டுச் செலவின நிகழ்ச்சித் திட்டங்களின் அமுலாக்கலுக்கும், ஒதுக்கீடுகளைக் குவிமையப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

முதலீட்டுச் செலவுகளின் செயலாற்றுகைகள் பொதுவாக எதிர்பார்க்கப்பட்டதிலும் கீழாக உள்ளதற்கு கொள்வனவு மற்றும் படிமுறைகளின் தாமதம், போதுமான மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் தொடர்ந்த மதிப்பீடுகள் இல்லாமை அதேவேளை திறைசேரியின் தொடர்ச்சியற்றதான காசு விடுவித்தல் என்பன காரணமாகின்றன. திறைசேரி செயலாற்றுகை, (காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம்) வருமானக்குறைவு, பல்வேறுபட்ட காரணங்களுக்காகச் செலுத்த வேண்டிய செலவுகள் காரணமாக அடிக்கடி பாதிப்புறுகிறது.



சம்பளமும் ஓய்வூதியமும் அரச வருமானத்தின் 32 சதவீதத்தினை உள்ளெடுப்பதால், செலவிடும் முகவராண்மைகள் ஆட்சேர்ப்புகள் அங்கீகாரமளிக்கப்பட்ட வேலைப்படையிலும், வரவு செலவுக்குள்ளும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். ஆளணி முகாமைத்துவம் தொடர்பான சம்பளமற்ற செலவுகள் கட்டாயமாக சிக்கனப்படுத்தப்பட வேண்டும். அதிகரித்துக் கொண்டிருக்கும் சக்தி செலவுகளுக்கிடையில், மின்சார

எவ்வாறெனினும், இரண்டாவது காலப்பகுதியில் முதலீட்டுச் செலவினங்கள் ஒரு மேல்நோக்கிய போக்கைச் சுட்டிக் காட்டுகின்றன. இப்போக்கைத் தொடர்ந்தும் பராமரிக்க அனைத்துச் செலவிடும் முகவராண்மைகளும் மீண்டெழும் செலவினங்களை தமது ஒதுக்கீடுகளுக்குள் முகாமைத்துவம் செய்ய முயற்சிக்க வேண்டும்.

2007 இல் மொ.உ.உ.இன் 6 சதவீதத்திற்கு மேலாக பொது முதலீட்டைப் பராமரிப்பதற்கும், தொடர்ச்சியான

மொ.உ.உ.இல் 7–8 சத வீதத்தை நோக்கிய அதிகரிப்பிற்கும் மீண்டெழும் செலவினத்தில் இடைத்தரப் போக்கினையும் வருமான மிகையினையும் உறுதிப்படுத்த வேண்டும்.

இப்போது கூட்டலாக ரூபா 1,875 மில்லியன் நிதி செயலாற்றுகையற்ற தொழில்முயற்சிகளுக்கு மாற்றப்படுகிறது. தற்காலிக ஒதுக்கீடுகள் இவற்றுக்கு வழங்கப்பட்ட போதிலும் மிகச் சிலவே திருப்தியளிக்கக் கூடிய முன்னேற்றங்களைக் காட்டின. நிரை அமைச்சுகள் இவற்றின் சாத்தியத்தன்மைக்கு ஒரு நம்பகத்தன்மையான மதிப்பீட்டினைச் செய்ய வேண்டும். நட்டமுறும் பொதுமுயற்சிகள் வரவு செலவுத்திட்டத்தின் ஆதரவில் தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு தமது செயற்றிறனை அதிகரிப்பதனை இலக்காகக் கொள்ள வேண்டும். இவ்வமைப்புகள் 2008 ஒதுக்கீட்டிற்கு புதிய வேண்டுகோள்களை விடுக்கும் வேளையில் வரவு செலவுத்திட்டத்தில் தங்கியிருக்கும் தன்மையைக் குறைப்பதற்கான முறைமைகளை முன்மொழிய வேண்டும்.

இலாபடையும் பொதுமுயற்சிகள் அரசாங்க வரவுசெலவுத்திட்ட மேம்படுத்துகைத் தேவைகளுக்குத் தமது பங்களிப்பை வழங்க வேண்டும். இத் தொழில் முயற்சிகள் உயர் பங்கிலாபங்களை 2008 இல் வழங்குவதற்கு இலக்கிடப்பட வேண்டும்.

1.4 துறைசார் கொள்கை முன்னுரிமைகள்

ந.கா.செ. 2006 – 2009 இன் மூன்றாவது ஆண்டான, வரவுசெலவுத்திட்டம் 2008, புத்தாண்டு அபிவிருத்தித்திட்டத்தில் அடையாளங் காணப்பட்ட அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைவதற்கு தொடர்ந்தும் துறைசார் அடிப்படையைக் கொண்டதாக விருக்கும். இச்செயற்பாடுகளுக்கு வசதி அளிப்பதற்கு ஏற்றவாறு மொத்த வரவு செலவுத்திட்ட வளங்களிலிருந்து ஒவ்வொரு துறைக்கான பங்கு வழங்கப்பட்டு அது செலவு செய்யும் முகவராண்மைகளுக்கிடையில் ஒதுக்கீடு செய்யப்படும். அனைத்து அமைச்சுக்களும், திணைக்களங்களும், முயற்சியாண்மைகளும் ஏனைய முகவராண்மைகளும் ஒன்பது கொத்தணிகளின் கீழ் வகைப்படுத்தப்படும். (1) கலை, கலாசாரம் மற்றும் சமயம் (2) நிர்வாகம், செயற்பாடு மற்றும் கண்காணித்தல் (3) மனிதவள அபிவிருத்தி (4) உட்கட்டமைப்பு அபிவிருத்தி (5) உற்பத்தி, சேவைகள் மற்றும் சுற்றாடல் (6) வாழ்வாதாரமும் பிராந்திய அபிவிருத்தியும் (7) விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (8) சமூகப் பாதுகாப்பு (9) தேசிய பாதுகாப்பும் சட்ட செயற்படுத்துகையும்.

2008 க்கான வரவு செலவுத்திட்ட எதிர்வு கூறல்கள், துறைசார் கொள்கை முன்னுரிமைகள் மற்றும் 2008 இல் அமுலாக்குவதற்கு அடையாளங் காணப்பட்டவை குறித்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமைவாக மீளாக்கம் செய்யப்பட வேண்டிய தேவையுள்ளது. நிதி திட்டமிடல் அமைச்சு, செலவிடும் முகவராண்மைகளுடன் கலந்துரையாடியும், ஒவ்வொரு துறையின் கீழ் அடையாளங் காணப்பட்ட செலவிடும் முகவராண்மைகளுக்கிடையில் பொருத்தமான ஒதுக்கீடுகளை துறைசார் வள மட்டத்தில் உறுதி செய்வதன் மூலமும் ந.கா.செ. 2008 முடிவு செய்யப்படும்.

பகுதி 2

2. வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் தயாரித்தலும் சமர்ப்பித்தலும்

2.1 சுய மதிப்பீடு

அனைத்துச் செயலாளர்களும் மற்றும் திணைக்கள, நிறுவனத் தலைவர்களும் 2007 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் உள்ள 2008 இற்கான எதிர்வு கூறப்பட்ட இலக்கங்களை மீள்நோக்குவதற்கு முன்பு, 2006-2007 காலப்பகுதிக்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளுக்கு எதிரான செயலாற்றுகைகளில் ஒரு சுய மதிப்பீட்டைச் செய்யும்படி வேண்டப்படுகின்றார்கள்.

2007 க்கான செயலாற்றுகைகளை மதிப்பிடுகின்ற வேளையில், 2008 – 2010 மதிப்பீடுகளை மீள்நோக்குவதற்கு, அமுலாக்கல் திறனையும்/படிமுறை நிலைகள் அதேபோல் மேலே அழுத்திக் கூறப்பட்ட பேரினப் பொருளாதார நிலைகள் என்பவை பிரதிபலிக்கும் வகையில் கவனமெடுக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. இதற்கு மேலும், அமுலாக்கல் திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டக் குறிக்கோள்கள் அடையப்பட முடியாதவிடத்து அப்பிரச்சினைகளை எவ்வாறு வெற்றி கொள்வது என்பதையும் கண்டறியுமாறும் வேண்டப்படுகின்றார்கள்.

2.2 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2008 ஐத் தயாரிப்பதற்கான வழிகாட்டிகள்.

அனைத்துச் செலவிடும் முகவர்களும் 2008 இற்கான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு 2007 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் வழங்கப்பட்ட 2008 இற்கான எதிர்வு கூறல்களை மதிப்பிடுவதோடு 2007 மதிப்பீடுகளையும் மீள்மதிப்பிடுவதோடு இச்சுற்றுநிருபத்தில் சொல்லப்பட்ட வழிகாட்டிகளையும், தேவையான இணைப்புகளையும் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2.2.1. அனைத்துச் செலவிடும் முகவராண்மைகளின்

(அ) பெட்டி (1) இல் தரப்பட்ட அரச செலவின கட்டுப்பாட்டுப் படிநிலைகளைப் பின்பற்றும் படியும்,

(ஆ) அவர்களது வருடாந்தக் கணக்கீட்டிற்கு கணக்காய்வு அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளுக்கு முக்கியம் கொடுக்கும்படியும்,

(இ) அரசாங்க முன்னுரிமைகளோடு நிகழ்ச்சித் திட்டங்கள் ஒத்துப்போவதாக இருப்பதை வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மீள்பார்வை செய்கையில் உறுதிப்படுத்துகின்ற வேளையில் அவை நெகிழ்ச்சித் தன்மையைப் பிரதிபலிப்பனவாகவும் இருக்கும்படியும் வேண்டப்படுகின்றனர்.

2.2.2 ஆளுக்குரிய வேதனாதிகளை மதிப்பிடல்

அ. சம்பளங்களுக்கும் வேதனங்களுக்கும் மதிப்பீடுகள் தயாரிக்கும் போது 01.08.2007 ம் திகதியில் இருந்த உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கையில் அவரவருக்குரிய சம்பளப்புள்ளிகளின் அடிப்படையில் கணிப்பீடுகள் செய்யப்பட வேண்டும்.

ஆ. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் ஏலவே அங்கீகரிக்கப் பட்டுள்ள புதிய நியமனங்களுக்கான ஏற்பாடுகள், வாழ்க்கைச் செலவுப்படி விடுமுறைச் சலுகைப்படி ஏனைய ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பொறுப்புக்கள் என்பவற்றிற்காக நிதி ஏற்பாடுகள் திறைசேரியின் நானாவித வாக்குப் பணங்களின் கீழ் செய்யப்படும்.

இ. மேலதிக நேரப்படிக்கான மதிப்பீடுகள் 2007 ஆம் ஆண்டிற்கான உண்மைச் செலவினம் அல்லது சம்பள நிதி ஏற்பாட்டில் 5 சத வீதம் இரண்டில் எது குறைந்ததோ அதன் அடிப்படையில் செய்யப்பட வேண்டும்.

ஆளணி சம்பந்தமான விபரங்களும் ஆளுக்குரிய வேதனாதிகள் தொடர்பான விபரங்களும் **இணைப்பு 1** இல் தரப்பட்டுள்ள படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2.2.3 சேவைகள் மீதான செலவினம்.

அ. எரிபொருட்கள், தொலைத் தொடர்பு, வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்/ பெறல் என்பவற்றைக் கணிப்பீடு செய்யும் போது ஏலவே நடைமுறையிலுள்ள விதிகளும் பிரமாணங்களும் **(இணைப்பு11)** மிகவும் கண்டிப்பாக பின்பற்றப்படல் வேண்டும்.

ஆ. மின்சாரம், நீர்த்தேவைகள், சுத்திகரிப்பு, பாதுகாப்புச் சேவைகள் தொடர்பாபான செலவீடுகளை மதிப்பீடு செய்யும்போது செலவினச் சிக்கன நடைமுறைகள் வெளிக்காட்டப்பட வேண்டும்.(அனேகமான நிறுவனங்கள் இதற்குரிய சேலவை 20 முதல் 30 வீதம் வரை பல்வேறு செலவுக்குறைப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் குறைக்கலாம் என அறிவித்துள்ளன.)

வாகனங்கள்,தொலைத்தொடர்பு சேவைகள் தொடர்பான விபரங்கள் **இணைப்பு 111,1V** இல் தரப்பட்டுள்ள படிவங்கள் மூலம் செய்யப்பட வேண்டும்.

2.2.4 அபிவிருத்திச் செலவுகள்

அனேகமான செலவின நிறுவனங்கள் தமக்குரிய அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி ஏற்பாடுகளை செலவிட முடியாத நிலையிலுள்ளன. அபிவிருத்திக்கான முழு அளவினதான நிதிகள் சலுகைக் கடன்கள் மூலமும் உள்நாட்டு கடன்படுதல் மூலமுமே பெறப்படுவதால் செலவு செய்யும் நிறுவனங்கள் மூலதனத்தின் மீதான வருமான வீதம் பற்றி கவனஞ் செலுத்த வேண்டியது அவசியமாகும். எனவே அபிவிருத்தி செலவினத்தை மதிப்பீடு செய்வதில் பின்வரும் கருதுகோள்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

அ. அபிவிருத்தித் திட்டங்களுக்கான மூலதன நிதி ஏற்பாடுகள் யதார்த்தபூர்வமான திட்ட அமுலாக்கல் திறனின் அடிப்படையில் கணிப்பிடப்படல் வேண்டும்.

ஆ. மூலதனச் சொத்துக்களின் அபிவிருத்தி, புனரமைப்பு என்பவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

இ. புதிய ந.கா.செ.ச ஆலோசனைகள்

I. ஏற்கனவே நடைமுறையிலுள்ள அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக முடிவுறுத்தல், அல்லது மெதுவாகச் செயற்படும் அபிவிருத்தித் திட்டங்களை மீளமைத்தல் என்பவற்றிற்கு, புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்பதாகக் கவனஞ் செலுத்தப்படவேண்டும்.

II. தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தை 01.08.2007 க்கு முன்பாகப் பெற்றுள்ள புதிய திட்டங்கள் வரவுசெலவுத்திட்டத்தில் சேர்க்கப்படலாம். (பெட்டி 1 ஐப் பார்க்கவும்)

ஈ. வெளிநாட்டு உதவி பெறும் அபிவிருத்தி திட்டங்கள்

I. ஏற்கனவே அமுலிலுள்ள மெதுவாக இயங்கும் திட்டங்களை துரிதப்படுத்துவதுடன் இயங்காத நிலையிலுள்ள திட்டங்களை அட்டவணையிடவும். இயங்காத நிலையிலுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அவற்றின் பிரச்சனைகளுக்கு உரிய மாற்றுத் தீர்வுகளை சிபாரிசு செய்யவும்.

II. நிதி பெறுவதை உறுதி செய்வதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் சம்மதத்தைப் பெறவும்.

III. புதிய இயங்கும் வெளிநாட்டு நிதித் திட்டங்களுக்காக தொடர்புபட்ட உள்நாட்டு நிதித் தேவைகளை இனங்காணவும்.

IV. சிறீலங்கா சுங்கத்திணைக்களத்தால் நிபந்தனையின் அடிப்படையில் உள்வருவதற்கு அனுமதிக்கப்பட்டவை தொடர்பாக முந்திய வருடத்திற்கான தீர்க்கப்படாதிருக்கும் வரிப் பொறுப்புகளை இனங்காணவும்.

V. 2008 ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்காக பல்வேறு நாடுகளிடமிருந்து பெறப்படவுள்ள விசேட நன்கொடை உதவிகளை காலதாமதமின்றி இனங்கண்டு கொள்ளவும்.

உ. வாகனங்கள் கொள்வனவு

I. பயன்பாட்டு வாகனங்களை (அம்புலன்சுகள் உழவு இயந்திரங்கள் லொறிகள் டிரக்குகள் பவுசர்கள்) தவிர ஏனைய வாகனங்கள் கொள்வனவுக்கான நிதி ஏற்பாடுகள் அவற்றின் உண்மையான தேவை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப் படலாம்.

II. இரட்டைக்கதவு அலுவலகத்தேவை வாகனங்கள் பயன்பாட்டு வாகனங்கள் என்பன வெளிநாட்டு உதவித்திட்டத்தின் கீழ் மாத்திரமே அனுமதிக்கப்படும்.

ஊ. பன்முகப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பான பிரதேசங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் விடயங்கள் சார்பில் முரண்பாடுகள் இரட்டிப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக மாகாண சபைகளுடன் இணைந்து செயற்படவும்.

2.2.5 நியதிச்சபைகள், நிறுவனங்கள் தொடர்பான நிதி ஏற்பாடுகள்

இணைப்பு VI இல் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் நிதிக் குறியீடுகளின் கீழ் அனைத்துச் செலவு அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

2.2.6 மேலதிக நிதி ஒதுக்கீடுகள்

வளங்களின் மிகைப் பயன்பாடுகள் குறைப் பயன்பாடுகள் என்பன பொதுச் செலவுக் கட்டுப்பாடு அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்தினால் விமர்சிக்கப்படும்.
எனவே, கிடைக்கக் கூடிய வளங்களின் அருமை கருதி யதார்த்த பூர்வமான மதிப்பீடுகளைத் தயாரிக்குமாறு அமைச்சுக்கள் அறிவுறுத்தப்படுகின்றன.
விசேட சந்தர்ப்பங்களிலன்றி நி.பி. 66 மாற்றங்களும் மேலதிக வரவுசெலவுத்திட்ட ஒதுக்கங்களும் திறைசேரியால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.

2.2.7 பொதுத் தேவைகள்

அ. கேள்விப்பத்திரங்களைக் கோருவதற்கும் நாணயக்கடன் பத்திரங்களைத் திறப்பதற்கும் முன்பு நிதி ஏற்பாடுகள் இருக்கிறதா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளவும்.

ஆ. தேசிய கொள்வனவு முகவர் நிலையத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைவாக முக்கியமானதென இனங் காணப்பட்ட கொள்வனவுகள் தொடர்பாக, கொள்வனவுக் கால அட்டவணைகளைச் சமர்ப்பிக்கவும்.

இ. உங்கள் நிறுவனப் பணியாளர்களிடையே வீண்விரயங்களைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி வலியுறுத்தவும்.

பெட்டி 1- செலவினக் கட்டுப்பாட்டு நடைமுறைகள்

மூலதனச் செலவுகள்

- வெளிநாட்டு உதவியைப் பெறவுள்ள திட்ட முன்மொழிவுகள், வெளிநாட்டு வளத்திணைக்களத்தின் சம்மதத்துடன் மதிப்பீட்டிற்கும் சிபார்சு செய்வதற்கும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தற்கு அனுப்பப்படல் வேண்டும். ரூபா 20 மில்லியனுக்கு மேற்பட்ட திட்டங்கள் அமைச்சரவையினதும், ரூபா 20 மில்லியனுக்குக் கீழ்ப்பட்ட திட்டங்கள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினதும் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

- பத்துவருட அபிவிருத்தித் திட்ட அடிப்படையில் நடுத்தரக்கால செலவினத்திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டுக்கான மதிப்பீடுகளும், அடுத்த இரு வருடத்திற்கான எதிர்வு கூறல்களும் காட்டப் படுகின்றன. மேலும் நடப்பு ஆண்டுக்கான செலவுக்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் நிதி அமைச்சரினால் திறைசேரிச் செயற்பாடுகளுக்கு செலவு ஆணை வழங்கப்படுகின்றது.

- செயற்றிட்ட அடிப்படையில் காசுத் தேவை எதிர்வுறல் தயாரிக்கப்பட்டு திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு காசு விடுவிப்புக்காக அனுப்பப்படுகின்றது.

- நடுத்தர இடைக்கால செலவுத்திட்ட அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டவற்றின் மாற்றங்கள், அவை வெளிநாட்டு உதவி சம்பந்தப்பட்டவையாயின் வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் சம்மதத்துடன் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திற்குப் பரிந்துரை செய்யப்படவேண்டும்.

- மேலதிக நிதி ஒதுக்கங்கள், நி.பி. 66 மாற்றங்கள் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட வேண்டும்.

- மொத்த மதிப்பீட்டுச் செலவு மாற்றங்கள், அமைச்சரவை, கேள்விப் பத்திர சபை என்பவற்றால் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம், பொது முயற்சிகள் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் (வெளிநாட்டு உதவியாயின்) ஆகியவற்றின் சம்மதத்துடன் அங்கீகரிக்கப்படும்.

- நிநி, பௌதீக அடைவுகள், தேசிய திட்டமிடல் திணைக்களம் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் என்பவற்றால் செலவிடும் முகவர்களுடன் இணைந்து மேற்பார்வை செய்யப்படும். இத்துடன் வெளிநாட்டு உதவி, வரவுசெலவுத்திட்ட கண்காணிப்புத் திணைக்களமும் கருத்திட்ட மேற்பார்வையில் ஈடுபடும்.

நடைமுறை மீண்டெழுஞ் செலவுகள்

- மீண்டெழுஞ் செலவின விடயங்களை இனங்காணும்போது செயல்திட்டம், கடந்த காலச் செலவு, திணைக்களத்தின் தன்மை என்பவற்றைக் கருத்தில் கொண்டு பொது நிருவாகத் அமைச்சினாலும் திறைசேரி யினாலும் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்களின் அடிப்படையில் செயற்படவும்.

- நிறுவனத்தின் செயற்றிட்டத்தின் பிரகாரம் நடுத்தரக்கால செலவினத் திட்டங்களின் கீழ் எதிர்வுகூறப்படும் செலவினங்களுக்கான நிதி ஏற்பாடுகள் நிதி அமைச்சினதும் பாராளுமன்றத்தினதும் அங்கீகாரத்தின் கீழ் செய்யப்படுகின்றன.

- மாதாந்த, பருவகால தேவை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட காசுத் தேவை எதிர்வுகூறல் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு காசு விடுவிப்புக்காக அனுப்பப் படுகின்றது. கட்டுநிதித் தேவைகளுக் காக காசு விடுவிப்புக்கு திறைசேரி அங்கீகாரத்தற்கு அமைவாக வசதிக் கணக்கு பயன்படுத்தப்படும்.

- நடப்பு ஆண்டில் நி.பி. 66 இன் கீழ் மாற்றங்களின் அடிப்படையில் ஏற்பாட்டுத்தொகை மாற்றங்கள், அல்லது மேலதிக நிதி ஒதுக்கங்கள் என்பன செலவிடும் முகவராண்மைகளின் கோரிக்கையின் பேரில் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்படும்.

- தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம், மாதாந்த செலவினப் போக்கினை மீளாய்வு செய்வதன் மூலம் செலவுகளை வரவுசெலவுத்திட்டத் தொகைக்குள் கட்டுப்படுத்துவதற்காக ஆலோசனைகளையும், திருத்தநடவடிக்கைகளையும் சிபார்சு செய்யவும்.

- செலவினங்களை அனுமதித்தல், அங்கீகரித்தல், உறுதிப்படுத்துதல் என்பவற்றில் தொடர்புள்ள பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், சம்பந்தப்பட்ட ஏனைய உத்தியோகத்தர்கள் நிதிப் பிரமாணங்கள், திறைசேரிப் பணிப்புகள், சனாதிபதியின் பணிப்புகள், அமைச்சரவைத் தீர்மானங்கள், நிதி வழங்கும் நிறுவனங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்பவற்றுடன் இயைவுபடக் கூடியவாறு செயற்பட வேண்டும்.

- உள்ளக, வெளிக்கணக்காய்வாளர்களின் அவதானிப்புகளுக்கு உரிய கவனஞ்செலுத்தி மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

2.3. 2008 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டங்களைச் சமர்ப்பித்தல்

2008 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு மதிப்பீடுகளை தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திற்கு, **இணைப்பு V, இணைப்பு VI படிவங்களைப் பயன்படுத்தி 30.08.2007 க்கு அல்லது அதற்கு முன்பதாக** அனுப்பி வைக்குமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

தமது நிறுவனங்களின் வரவுசெலவின் பிரதிகளை, பணிப்பாளர் நாயகம், பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவர்களுடைய வரவுசெலவுத்திட்டத்தினையும், வரவுசெலவுத்திட்டக் கோரிக்கைகளையும் மீளாய்வு செய்வதற்கான கொத்தணிக் கூட்டங்கள் 25.08.2007 முதல் 10.09.2007 ஆம் காலப்பகுதியுள் நடாத்தப்படும்.

2.4 தெளிவாக்கங்கள்

தெளிவாக்கங்கள் எதனையும் பெற வேண்டின், இணைப்பு VI இல் தத்தம் அமைச்சு| திணைக்களங்கள்| நியதிச் சபைகள்| கருத்திட்டங்கள் அல்லது துறையின் பொருட்டு அவரவர்க்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்கள உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும். உங்களுக்கெனத் தயாரிக்கப்பட்டுள்ள 2008 – 2010 ஆரம்ப மதிப்பீட்டினையும், 2007 ஆம் ஆண்டிற்கான மீள் மதிப்பீட்டினையும் உங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெறுவதற்காக 15.08.2007 இற்கு முன்பு வரவுசெலவுத்திட்ட உத்தியோகஸ்தர்கள் அனுப்புவார்கள். வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் சம்பந்தமான கூட்டங்களுக்கு திறைசேரிச் செயலாளர்| பிரதிச் செயலாளர் தலைமை தாங்குவார்.

2.5 இணைப்புகள்

நடுத்தர காலச் செலவு சட்டகவரையினை மீளாய்வு செய்வதற்காகவும், 2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காகத் தரப்பட்டுள்ள வழிகாட்டல்களைப் பின்பற்றுவதற்காகவும் பின்வரும் படிவங்களைப் பயன்படுத்தவும்.

இணைப்பு	விபரம்
இணைப்பு I	2008 ஆம் ஆண்டுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆளணி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகள் பற்றிய தகவல்கள்
இணைப்பு II	எரிபொருள், வாகனங்களை வாடகைக்குப் அமர்த்துதல்/ பெறுதல் மற்றும் தொலைத் தொடர்புசேவைகள் பற்றிய சுற்றுநிருபங்களும் வழிகாட்டிகளும்
இணைப்பு III	வாகனங்கள் தொடர்பான விபரங்கள்
இணைப்பு IV	தொலைபேசி, தொலை நகல் தொடர்பான விபரங்கள்
இணைப்பு V	அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்குமான மதிப்பீடுகள் சமர்ப்பித்தல் மாதிரி - 2008
இணைப்பு VI	நிறுவனங்களுக்கான (நியதிச் சட்ட சபைகள்) மதிப்பீடு சமர்ப்பித்தல் மாதிரி - 2008
இணைப்பு VII	தேசிய வரவுசெலவுதிட்டத் திணைக்கள அலுவலகர்களின் தொடர்பு விபரங்கள்

ஒப்பம்: பீ.பி.ஜயசுந்தர,
நிதி,, திட்டமிடல் அமைச்சின் செயலாளரும்
திறைசேரியின் செயலாளரும்.

பிரதிகள்- i. கணக்காய்வாளர் நாயகம்
ii. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகளின் தலைவர்கள்
iii. கருத்திட்டப் பணிப்பாளர்கள்

குறிப்பு : ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் வெவ்வேறான படிவங்கள் பயன்படுத்துதல் வேண்டும்

2008 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணிகள் மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகள் பற்றிய விபரங்கள்

தலைப்பு :
நிகழ்ச்சித்திட்டம் :
கருத்திட்டம் :

பதவியும் பெயரும்	பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் (அ)	பதவிகளின் எண்ணிக்கை				2007 க்குரிய சம்பளம் (ஆண்டுக்கு)	அடுத்த சம்பளவேற்றத் தொகை (ஆண்டுக்கு	2008இல் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவும் விடுமுறைக் கொடுப்பனவும்	2008 இல் வாழ்க்கைச் செலவு மற்றும் மொழிக் கொடுப்பனவுகள்	2008இல் சீருடைக் கொடுப்பனவு	2008 இல் விடுமுறை ஆணைச்சீட்டுக் கொடுப்பனவு	2008இல் ஏனைய கொடுப்பனவுகள் (ஈ)
		அனுமதிக்கப் பட்ட ஆளணி	2007.08.01இல் உண்மையான ஆளணி	2008இல் நிரப்பப்பட வேண்டிய ஆளணி (ஆ)	2008இல் நிரப்பப்பட வேண்டிய ஆளணி (இ)	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
உதா1:பணிப்பாளர் (இ.நி.சே.1)	SL 1 2006	8	4									
பெயர் 1												
பெயர் 2												
……..												
பெயர் 4												
வெற்றிடம்				2	1							
பணிப்பாளர் (இ.தி.சே.1)	SL1 2006	1	1									
உதா2:முகாமைத்துவ உதவியாளர்	MN2- 2006	12	7									
பெயர் 1												
பெயர் 2												
……..												
……..												
பெயர் 7												
வெற்றிடம்				2								
தொகை												

(அ) பொது நிர்வாக சுற்றுநிருபம் இல.6/2006 அமைய

(ஆ) முகாமைத்துவ சேவைகள் தினைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை

(இ) 2007.01.01 - 2007.08.01 காலப்பகுதியில் ஓய்வுபெற்றவர்களின் எண்ணிக்கை ஆனால் குறிப்பிட்ட பதவிகளை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாதவை

(ஈ) ஏனைய கொடுப்பனவுகள் குறிப்பிடப்படல் வேண்டும்.

எரிபொருள், வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்/பெறல், தொலைத்தொடர்பு சேவைகள் பற்றிய சுற்றுநிருபங்களும், வழிகாட்டல்களும்

செலவுப் பகுப்பு	பொருத்தமான சுற்றறிக்கைகள்/வழிகாட்டல்கள்
எரிபொருள்	14.07.2006 ஆம் திகதிய 11/2006 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கலும், அத்தகைய வாகனங்களின் சாரதிகளுக்கு மேலதிக நேர, இணைந்த படிக் கொடுப்பனவுகளும். அரச செலவின முகாமைத்துவம் தொடர்பாக 14.01.2006, 18.03.2006, 23.10.2006 ஆம் திகதிகளில் மாண்புமிகு சனாதிபதி அவர்களால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கைகள். 15.04.2007 இல் வெளியிடப்பட்ட 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் - கருத்திட்ட உத்தியோகத்தர்களின் நியமனம், சம்பளம், முகாமைத்துவம் தொடர்பானது. அரச கூட்டுத்தாபன நியதிச் சபைகள் உத்தியோகத்தர்களுக்கான உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகள் தொடர்பாக 09.10.2006 இல் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பொ.மு.தி 039 இலக்கச் சுற்றறிக்கை.
வாகனங்களை வாடகைக்குப் பெறல்/அமர்த்துதல்	அரச செலவின முகாமைத்துவம் தொடர்பாக 04.01.2006, 18.03.2006, 23.10.2006 ஆம் திகதிகளில் மாண்புமிகு சனாதிபதி அவர்களால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கைகள். 05.04.2007 இல் வெளியிடப்பட்ட 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் - கருத்திட்ட உத்தியோகத்தர்களின் நியமனம், சம்பளம், முகாமைத்துவம் தொடர்பானது. அரச கூட்டுத்தாபன நியதிச் சபைகள் உத்தியோகத்தர்களுக்கான உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகள் தொடர்பாக 09.10.2006 இல் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட பொ.மு.தி 039 இலக்க சுற்றறிக்கை. வாகனங்களை வாடகைக்குப் பெறல்| அமர்த்துதல் தொடர்பாகவும், வாகனங்கள் கொள்வனவு தொடர்பாகவும் 24.06.2004 இல் வெளியிடப்பட்ட தேசிய வரவுசெலவுத்திட்டச் சுற்றறிக்கை இலக்கம் 112. பொதுச் சேவை நிறுவனங்களின் அலுவலகப் பாவனைக்காக வாகனங்களை வாடகைக்குப் பெறல்/அமர்த்துதல் தொடர்பாக 11.10.2002 இல் கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கம் கொ.அ.அ.அ/(எம்.பீ.ஆர்.டீ) வாகனங்கள் இலக்கமுள்ள சுற்றறிக்கை.
தொலைபேசிகள்	அரச செலவின முகாமைத்துவம் தொடர்பாக 04.01.2006, 18.03.2006, 23.10.2006 ஆம் திகதிகளில் மாண்புமிகு சனாதிபதி அவர்களால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கைகள். அரச செலவினக் கட்டுப்பாடு தொடர்பாக 03.04.2003 இல் வெளியிடப்பட்ட பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 393 (4). பொதுச்சேவை நிறுவனங்களில் தொலைத்தொடர்புச் சேவைகளை முகாமைத்தவம் செய்தல் தொடர்பாக 26.02.2007 இல் வெளியிடப்பட்ட அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 424.

வாகனங்கள் தொடர்பான விபரங்கள்

குறிப்பு :அமைச்சுக்கள்,திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களிலுள்ள அனைத்து வாகனங்கள் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் தனித்தனியான படிவங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

தலைப்பு :

நிகழ்சித்திட்டம் :

கருத்திட்டம் :

(1) குறித்தெதுக்கப்பட்ட வாகனங்கள்

	உத்தியோகஸ்தரின் பெயரும் பதவியும் (அ)	வாகன இலக்கம்	இயந்திரத்தின் வலு	வாகனத்தின் வகை (கார், வான்,ஜீப்,டபிள்கப் போன்றன)	எரிபொருள் வகை (பெற்றோல்/டீசல்)	உற்பத்திசெய்யப்பட்ட வருடம்	கொள்வனவு செய்யப்பட்ட வருடம்	உரிமையாளர் (உ/க/வா) (ஆ)	வேறு குறிப்புக்கள் இருப்பின் (உதா.வாடகை வாகனமானால் மாதவாடகை)
1									
2									
3									
4									
….									
….									

(2) தொகுதி வாகளங்கள்

தொடர் இல.	வாகன இலக்கம்	இயந்திரத்தின் வலு	வாகனத்தின் வகை (கார், வான்,ஜீப்,டபிள்கப் போன்றன)	எரிபொருள் வகை (பெற்றோல்/டீசல்)	உற்பத்திசெய்யப்பட்ட வருடம்	கொள்வனவு செய்யப்பட்ட வருடம்	உரிமையாளர் (உ/க/வா) (ஆ)	வேறு குறிப்புக்கள் இருப்பின் (உதா.வாடகை வாகனமானால் மாதவாடகை)
1								
2								
….								
….								

(அ) அமைச்சர்கள் மற்றும் அவர்களுடைய தனிப்பட்ட உத்தியோகஸ்தர் உட்பட எல்லா உத்தியோகஸ்தர்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

(ஆ).உ.- உரிமை

க. - கடன்

வா -. வாடகை

குறிப்பு : ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் தனித்தனியான படிவங்களைப் பயன்படுத்தவும்

தலைப்பு :-
நிகழ்ச்சித்திட்டம் :-
கருத்திட்டம்:-

தொலைபேசிகள் மற்றும் தொலைநகல்கள் தொடர்பான விபரங்கள்

1, குறித்தொதுக்கப்பட்ட தொலைபேசிகள் (அ)

பதவி (ஆ)	அலுவலக தொலைபேசிகளின் எண்ணிக்கை	வதிவிட தொலைபேசிகளின் எண்ணிக்கை	கையடக்கத் தொலைபேசிகளின் எண்ணிக்கை	சர்வதேச தொலைத்தொடர்பு வசதியுடன் கூடிய தொலைபேசிகளின் எண்ணிக்கை	ஒரு மாதத்திற்கான சராசரிச் செலவு
உதா:1.பணிப்பாளர் நாயகம்	2	1	1	-	
2. பணிப்பாளர்					
3					
4					
5					

2. பொதுத் தொலைபேசி மற்றும் தொலைநகல்கள்

தொலைபேசி இலக்கம்	அமைவிடம்	ஒரு மாதத்திற்கான சராசரிச் செலவு
	1உதா: கணக்குப் பகுதி	
	2.	
	3.	
	...	
தொலைநகல் இலக்கம்	**அமைவிடம்**	**ஒரு மாதத்திற்கான சராசரிச் செலவு**
	1உத: கணக்குப் பகுதி	
	2.	
	3.	
	....	

(அ) அமைச்சர்களினதும் அவர்களின் தனிப்பட்ட உத்தியோகஸ்தர்களினதும் தொலைபேசி வசதிகள் உள்ளடக்கப்பட வேண்டும்.
(ஆ) பதவிநிலை உத்தியோகஸ்தர்.

அமைச்சுகளுக்கும் திணைக்களங்களுக்குமான

மதிப்பீடு சமர்ப்பித்தல் மாதிரி - 2008

தலைப்பு:

நிகழ்ச்சித்திட்டம்:

கருத்திட்டம்

ரூ.'000

உப கருத்திட்டம்	செலவு குறியீடு / விடயக்	விடயங்கள்	நிதியம்	வகுதி/செலவு விடயத் தலையங்கம்	உள்ளபடி 2006	மதிப்பீடு 2007	உள்ளபடி செலவு -2007 (30.06.2007 வரை)	மதிப்பீடு 2008
				மீண்டுவருஞ் செலவினம்				
				ஆளுக்குரிய வேதனாதிகள்				
	1001			சம்பளங்களும் கூலிகளும்				
	1002			மேலதிக நேர வேலைச் சம்பளம், விடுமுறைக் கொடுப்பனவுகள்				
				பிரயாணச் செலவுகள்				
	1101			உள்நாடு				
	1102			வெளிநாடு				
				வழங்கல்கள்				
	1201			எழுதுகருவி வகைகளும் அலுவலக தேவைப் பொருட்களும்				
	1202			எரிபொருள்				
	1203			உணவும் சீருடையும்				
	1204			மருத்துவ வழங்கல்கள்				
	1205			ஏனையவை				
				பராமரிப்பு செலவினங்கள்				
	1301			வாகனங்கள்				
	1302			பொறித் தொகுதியும் இயந்திரங்களும் உபகரணங்களும்				
	1303			கட்டிடங்கள், மற்றும் கட்டமைப்புகள்				
				சேவைகள்				
	1401			போக்குவரத்து				
	1402			தபால் மற்றும் தொலைத்தொடர்பு				
	1403			மின்சாரமும் நீரும்				
	1404			வாடகை மற்றும் உள்ளூர் வரிகள்				
	1405			ஏனையவை				
	1406			எதிர்பாராச் சேவைகள்				
				மாற்றல்கள்				
	1501			நலனோம்பல் நிகழ்ச்சித்திட்டங்கள்				
	1502			ஓய்வூதிய நன்மைகள்				
	1503			அரசாங்க நிறுவனங்கள்				
	1504			அபிவிருத்தி மானியங்கள்				
	1505			சந்தாப்பணங்கள் மற்றும் பங்களிப்புக் கட்டணங்கள்				
	1506			அரச ஊழியர்களுக்கான சொத்துக் கடன் வட்டி				
	1507			மாகாண சபைகள்				
	1508			ஏனையவை				
				வட்டிக் கொடுப்பனவுகள்				
	1601			உள்நாட்டுப் படுகடன்				
	1602			வெளிநாட்டுப் படுகடன்				

ரூ.'000

உப கருத்திட்டம்	செலவு குறியீடு விடயக்	விடயங்கள்	நிதியம்	வகுதி/செலவு விடயத் தலையங்கம்	உள்ளபடி 2006	மதிப்பீடு 2007	உள்ளபடி செலவு -2007 (30.06.2007 வரை)	மதிப்பீடு 2008
				மூலதனச் செலவினம்				
				மூலதனச் சொத்துகளின் மறுசீரமைப்பும் மேம்பாடும்				
	2001			கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்				
	2002			பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்				
	2003			வாகனங்கள்				
				மூலதனச் சொத்துகளின் கொள்ளல்				
	2101			வாகனங்கள்				
	2102			தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும்				
	2103			பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்				
	2104			கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்				
	2105			காணி சுவீகரிப்பும், காணித்திருத்தங்களும்				
				மூலதன மாற்றல்கள்				
	2201			அரசாங்க நிறுவனங்கள்				
	2202			அபிவிருத்தி உதவி				
	2203			மாகாணசபைகள்				
	2204			மாற்றல்கள் வெளிநாடு				
				நிதிச் சொத்துகளின் கொள்ளல்				
	2301			அரசாங்கத்தினால் உரிமைப் பங்களிப்பு				
	2302			கடன் வழங்கல்				
				செயலாற்றலைக் கட்டியெழுப்புதல்				
	2401			பயிற்சியும் செயலாற்றலைக் கட்டியெழுப்புதலும்				
				ஏனையவை				
	2501			மீள்கட்டமைப்பு				
	2502			ஏனைய முதலீடுகள்				
	2503			எதிர்பாராத சேவைகள்				
				அரசாங்க படுகடன் தீர்த்தல்				
				மீள்கொடுப்பனவுகள்				
	3001			கடன் மீள்கொடுப்பனவுகள் - உள்நாடு				
	3002			கடன் மீள்கொடுப்பனவுகள் - வெளிநாடு				
				மொத்தச் செலவு				

நிறுவனங்களுக்கான மதிப்பீடு
சமர்ப்பித்தல் மாதிரி - 2008

அமைச்சின் பெயர் : .....
அமைச்சின் தலைப்பு இல. .....
நிறுவனத்தின் பெயர் : .....

Rs.'000

செலவு விடயக் குறியீடு	வகுதி/ செலவு விடயத் தலையங்கம்	அட்டவணை இல.	2006 உள்ளபடி	2007 மதிப்பீடு	உள்ளபடி 2007 (30.06.2006வரை)	2007 மதிப்பீடு
	மீண்டுவருஞ செலவினம்					
	ஆளுக்குரிய வேதனாதிகள்					**XXX**
1001	சம்பளங்களும் கூலிகளும்	1				XXX
1002	மேலதிக நேர வேலைச்சம்பளமும் விடுமுறைக் கொடுப்பனவும்					XXX
1003	பிற கொடுப்பனவுகள்	2				XXX
	பிரயாணச் செலவுகள்					**XXX**
1101	உள்நாடு					XXX
1102	வெளிநாடு					XXX
	வழங்கல்கள்					**XXX**
1201	எழுதுகருவி வகைகளும் அலுவலக தேவைப் பொருட்களும்					XXX
1202	எரிபொருள்					XXX
1205	ஏனையவை	3				XXX
	பராமரிப்புச் செலவினம்					**XXX**
1301	வாகனங்கள்					XXX
1302	பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்					XXX
1303	கட்டிடங்களும் கட்டமைப்புகளும்					XXX
1304	ஏனையவை	4				XXX
	சேவைகள்					**XXX**
1401	போக்குவரத்து					XXX
1402	தபால் மற்றும் தொலைத்தொடர்பு					XXX
1403	மின்சாரமும் நீரும்					XXX
1404	வாடகை மற்றும் உள்ளூர் வரிகள்					XXX
1405	ஏனையவை	5				XXX
	மாற்றல்கள்					
1505	சந்தாப்பணங்கள் மற்றும் பங்களிப்புக் கட்டணங்கள்	6				XXX
	மூலதனச் செலவினம்					
	மூலதனச் சொத்துகளின் மறுசீரமைப்பும் மேம்பாடும்					**XXX**
2001	கட்டிடங்களும் கட்டமைப்புகளும்					XXX
2002	பொறித்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்					XXX
2003	வாகனங்கள்					
2004	ஏனையவை	7				XXX
	நிலையான சொத்துகளின் கொள்ளல்					**XXX**
2101	வாகனங்கள்					XXX
2102	தளவாடங்களும் அலுவலக உபகரணங்களும்					XXX
2103	இயந்திரங்கள்					XXX
2104	கட்டிடங்களும் கட்டமைப்புகளும்					XXX
2105	காணி சுவீகரிப்பும் காணித் திருத்தங்களும்					XXX
2106	ஏனையவை	8				XXX
	மொத்தச் செலவினம்					**XXX**

நிறுவனங்களுக்கான மதிப்பீடு
சமர்ப்பித்தல் மாதிரி - 2008

அரசாங்கப் பங்களிப்பு ரூ.'000

	அட்டவணை இல.	2006 உள்ளபடி	2007 மதிப்பீடு	உள்ளபடி செலவு 2007 31.06.2007 வரை	2007 மதிப்பீடு
மொத்த மீண்டுவருஞ் செலவினம்					xxx
கழிக்குக:					
வருமானம்	9				(xxx)
அரசாங்கப் பங்களிப்பு - மீண்டுவரும்					xxx
அரசாங்கப் பங்களிப்பு -மூலதனம்					xxx
மொத்த பங்களிப்பு		**xxx**	**xxx**	**xxx**	**xxx**

மதிப்பீடுகளுக்கான அட்டவணைகள் - 2008 (வசதிக்காக வரைவு அமைப்புகள் கீழேதரப்பட்டுள்ளன).

செலவு விடயக் குறியீடு		அட்டவணை இல.	ரூ.'000
1001	**சம்பளங்களும் கூலிகளும்**	**1**	**xxxx**
	சம்பளங்களும் கூலிகளும்		xxxx
	ஊ.சே.நி பங்களிப்பு		xxxx
	ஊ.ந.நி பங்களிப்பு		xxxx
1003	**ஏனைய படிகள்**	**2**	**xxxx**
	பணிக்கொடைக் கொடுப்பனவுகள்		xxxx
	……		xxxx
	……		xxxx
1205	ஏனையவை	**3**	**xxxx**
	……		xxxx
	……		xxxx
1304	ஏனையவை	**4**	**xxxx**
	……		xxxx
	……		xxxx
1405	ஏனையவை	**5**	**xxxx**
	……		xxxx
	……		xxxx
1505	**சந்தாப்பணங்கள் மற்றும் பங்களிப்புக் கட்டணங்கள்**	**6**	
	உள்நாடு		xxxx
	……		**xxxx**
	……		xxxx
	வெளிநாடு		xxxx
2004	எனையவை	**7**	xxxx
	……		xxxx
2106	எனையவை	**8**	xxxx
	……		xxxx
	வருமானம்		
	மூலம்	9	
	……		xxxx
	……		xxxx
	……		xxxx
	……		xxxx

தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்கள அலுவலகர்களின் தொடர்பு விபரங்கள்

பெயர்	பதவி	தொலைபேசி.இல.	உரிய அமைச்சு
திரு. கே.என்.ஜேகுரே	பணிப்பாளர்	2484681	வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
திரு. கமுணு சமரசிறி	பணிப்பாளர்	2484579	தொழில் உறவுகள், மனித வலுத்துறை அமைச்சு
			விளையாட்டுத்துறை, பொழுதுபோக்கு அமைச்சு
			வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சு
திரு. மஹிந்த சாலிய	பணிப்பாளர்	2484689	பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய அமைச்சு
			நீதி, சட்டமறுசீரமைப்பு அமைச்சு
			உள்ளக நிருவாக அமைச்சு
திரு.ஏ.கே.செனிவரட்ண	பிரதிப் பணிப்பாளர்	2484684	பொதுநிருவாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு
			மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
திருமதி..சாந்தினி விஜேவார்த்தன	பிரதிப் பணிப்பாளர்	2484582	நகரஅபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சு
			வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு
			நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சு
			நீர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சு
திருமதி..மலர்மதி கங்காதரன்	பிரதிப் பணிப்பாளர்	2484867	நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சு
திரு.அஜித் அபேசேகர	பிரதிப் பணிப்பாளர்	2484896	துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சு
			பெற்றோலியம், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு
			மின்வலு, சக்தி அமைச்சு
			போக்குவரத்து அமைச்சு
செல்வி.கிறிஸ்ரின் பெரேரா	பிரதிப் பணிப்பாளர்	2484858	ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அமைச்சு
			தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு
			வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, நுகர்வோர் அலுவல்கள் அமைச்சு
			சுற்றுலாத்துறை அமைச்சு
செல்வி.அனோஜா முனசிங்க	பிரதிப் பணிப்பாளர்	2484683	கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு
			காணி, காணி அபிவிருத்தி அமைச்சு
			நீர்ப்பாசனத்துறை, நீர் முகாமைத்துவ அமைச்சு
திருமதி.ருக்மல் அபேவிக்ரம	பிரதிப் பணிப்பாளர்	2484895	சுகாதார நலன் மற்றும் போசணை அமைச்சு
			சுதேச மருத்துவத்துறை அமைச்சு
செல்வி.கீதா விமலவீர	பிரதிப் பணிப்பாளர்	2484677	தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு
			கிராமிய கைத்தொழில், சுயதொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு
திருமதி.ஹிரன்சா களுதந்திரி	உதவிப் பணிப்பாளர்	2484578	நிதி, திட்டமிடல் அமைச்சு
			சிறப்புச் செலவினத் தலைப்புக்கள் - ஜனாதிபதி
			உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் அமைச்சரவை அமைச்சர்கள்
திரு.சந்தன விக்கிரமசூரிய	உதவிப் பணிப்பாளர்	2484760	கல்வி அமைச்சு
			உயர் கல்வி அமைச்சு
திரு.விமல் லியனகம	உதவிப் பணிப்பாளர்	2484686	விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சு
			கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு
			வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு
திரு.தாரக தேவபிரிய	உதவிப் பணிப்பாளர்	2484679	கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சு
			கால்நடை அபிவிருத்தி அமைச்சு
			சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சு

பெயர்	பதவி	தொலைபேசி.இல.	உரிய அமைச்சு
திரு.பி.சிவசங்கர்	உதவிப் பணிப்பாளர்	2484581	இளைஞர் வலுவூட்டுகை சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
			தபால், தொலைத்தொடர்பு அமைச்சு
			இளைஞர் அலுவல்கள் அமைச்சு
			சமூக அபிவிருத்தி, சமூக அநீதி ஒழிப்பு அமைச்சு
திரு.பிரசன்ன கிரிவத்துடுவ	உதவிப் பணிப்பாளர்	2484688	அரசியலமைப்பு அலுவல்கள், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு
			பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
			கலாசார அலுவல்கள் அமைச்சு
			தேசிய மரபுரிமைகள் அமைச்சு
			மத அலுவல்கள், ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு
திருமதி.எம்.எவ்.கே.நிசா	உதவிப் பணிப்பாளர்	2484580	துணைப்பயிர் அபிவிருத்தி அமைச்சு
			மக்கள் தோட்ட முகாமை, அபிவிருத்தி அமைச்சு
			பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
திரு.மகேஷ் ஹேவாவிதாரண	உதவிப் பணிப்பாளர்	2484894	சமூக சேவைகள், சமூக நலனோம்புகை அமைச்சு
			மீள் குடியமர்த்துகை அனர்த்த நிவாரண சேவை அமைச்சு
			சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் வலுவூட்டுகை அமைச்சு
			இடர் முகாமைத்துவ மனித உரிமைகள் அமைச்சு
திரு.உதேனி திலகரட்ண	உதவிப் பணிப்பாளர்	2484853	திட்டச் செயற்படுத்துகை அமைச்சு
			விசேட கருத்திட்டங்கள் அமைச்சு
திரு.சுனில் குணவர்த்தன	உதவிப் பணிப்பாளர்	2484687	மக்கள் தொடர்பாடல் தகவல் அமைச்சு
			சிறப்புச் செலவினப் பிரிவுகள்
			பாராளுமன்றம்
			பாராளுமன்ற முதல்வரின் அலுவலகம்
			பாராளுமன்ற பிரதான அரசாங்க கொறடாவின் அலுவலகம்
			பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம்
			முன்னாள் சனாதிபதியின் அலுவலகம் (கௌரவ டி.பி. விஜேயதுங்க)
			முன்னாள் சனாதிபதியின அலுவலகம் (கௌரவ ச.ப.குமாரதுங்க)
			அரசியலமைப்புச் சபை
			அரசாங்க சேவை ஆணைக்குழு
			நீதிச்சேவை ஆணைக்குழு
			தேசிய பொலிஸ் ஆணைக்குழு
			நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை
			இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு
			தேர்தல் திணைக்களம்
			கணக்காய்வாளர் அதிபதி
			நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்
			நிதி ஆணைக்குழு அலுவலகம்
			தேசிய கல்வி ஆணைக்குழு